பதிவு எண் ம. 6311 ★ தொலைபேசி: 551331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: கார்த்திகை 15 (30—11—72) வியாழன் வெளியூர்: கார்த்திகை 16 (1—12—72) வெள்ளி [இதழ்: 139

சர்க்கரை விலை-15 காசு உயருகிறது

புதுடில்லி, நவ. 30—

டிசம்பர் 1-ந் தேதியிலிருந்து நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் சர்க்கரைக்குக் கிலோ ஒன்றுக்குக் கூடுதலாக 15 காசு தர வேண்டும்.

மக்களவையில், உணவு—விவசாயத் துறைத் துணையமைச்சர் ஷேர் சிங் இதை அறிவித்தார்.

"நாடு முழுவதிலும் நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் சர்க்கரையின் விலையை கிலோவுக்கு ரூ. 2-லிருந்து ரூ 2.15-க்கு உயர்த்தப்படும்" என்றார் அவர்.

வற்றாத கடல் போன்றது கழகம்

ஆவியாகும் நீரும் கடலுக்கே மீளும்

சோர்வடையத் தேவையில்லை — அயராது உழைக்கச் சூளுரைப்பீர்

சேலம் செயல்வீரர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் உரை

சென்னை, நவ. 30 —

"தி.மு. கழக ஆட்சி, சனநாயக ரீதியில் அமைக்கப்பட்டதாகும்; எனவே, இந்த ஆட்சி தொடர்ந்து நிச்சயமாக நடைபெறத்தான் போகிறது; அதற்கேற்ற வகையில உங்களுடைய பணிகள் அமைந்திட வேண்டும்; பொறுமையாக இருக்க வேண்டும்; அடிபடுவதைத் தாங்க முடியாமல் எதிர்த்து அடித்துவிடுவது சுலபம் — தாங்கிக்கொண்டு பொறுமையாக இருப்பதுதான் சிரமம்! தீ வைப்பது சுலபம்—தீயை அணைப்பதுதான் சிரமம்!

"ஆகவே, சுலபமான வழியைத் தேடாமல் சிரமமான வழியை நாம் தேட வேண்டும்; ஏனென்றால், கல்லும் முள்ளும்—காட்டாறுகளும் குறுக்கிடுகின்ற பாதையில்தான் நாம் நடை போட்டு இன்று இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறோம்!

"ஆகவே, பொறுமையைப் பூரணமாகக் கொண்டு—கடமையையும் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கருவூலமாகக் கொண்டு—அண்ணா வழியில் அயராது உழைக்க அத்தனைப் பேரும் சூளுரை மேற்கொள்ள வேண்டும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சேலம் செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசுகையில் உருக்கத்துடன் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:—

"இன்றைக்கு ஒட்டுக் காங்கிரசு — சட்ட மன்றத்திலே — அ.தி.மு.க. என்று அங்கீகரிக்கப்பட்டு விட்டது!

அ.தி.மு.க. கட்சி— அடங்காதவர்கள் இருக்கின்ற தி.மு.க.!

அதிலே உள்ளவர்களுடைய பட்டியலைப் பார்த்தால், கட்சியிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் பலரும் அதில் சேர்ந்து கொண்டிருப்பதை பார்க்கலாம்; சிலர் அப்படி இல்லாமலும் இருக்கலாம்.

நமது கட்சியிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டவர்களும் — நிரந்தரமாக விலக்கப்பட்டவரும் தான் அங்கே இருக்கிறார்கள்; அதனுடைய தலைவரே அப்படித்தான்; ஆகவே, கட்டுப்பாட்டை மீறியதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் எல்லாம் அந்தப் புதிய கட்சியிலே சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்—அதை மறந்துவிடக்கூடாது!

'அண்ணா தி.மு.க.' என்று அண்ணாவின் பெயரை வைத்துவிட்ட காரணத்தினாலேயே, 'அங்கே தான் அண்ணா இருக்கிறார்' என்றோ — 'அங்கே தான் அண்ணாவின் கொள்கை இருப்பதாகவோ யாரும் கருதிக் கொள்ளக்கூடாது.

திருச்செங்கோடு வட்டச் செயலாளர் நடேசன், கடந்த இரண்டுமாத காலமாகத் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாற்றில் புரண்டுவிட்ட அத்தியாயத்தை எடுத்துச்சொல்லி, அதை வேக வேகமாக — எப்படி ஓடாத படங்களுக்கு வாரந்தோறும் வசூல் குறைகிறதோ அதைப்போல் அந்தப் 'புரட்சி' நடவடிக்கைகள் வாரத்திற்கு வாரம் சோர்வு அடையும் நிலையில் போய்விட்டதை விளக்கினார்கள்.

அவர்கள் ஒரு புறத்தில் தோல்வி காண்பதும், அதற்கு மாறாக நம்முடைய கழகம் இன்னொரு புறத்தில் வெற்றியைச் சந்திப்பதுமான சூழ்நிலைகள் இந்த இரண்டுமாத காலத்தில் நிரம்ப ஏற்பட்டிருக்கின்றன!

சென்னை மாநகராட்சியின் மேயர் தேர்தலானாலும், அல்லது கவர்னரிடம் மனு அளித்து, 'முதலமைச்சரிடம் கொடுக்கக்கூடாது' என்று கூற — அவர், 'முதலமைச்சரிடம்தான் கொடுப்பேன்' என்று கூற — 'அப்படியானால் உன்னிடம் தரமுடியாது — திருப்பிக் கொடுத்துவிடு' என்று வாங்கி, அதைக் குடியரசுத் தலைவரிடம் கொண்டுபோய்க் கொடுத்து, 'இதை நீங்களே பரிசீலித்து விசாரணை நடத்த வேண்டும்' என்று கேட்டுக்கொள்ள — அவர் தலைமையமைச்சரிடத்தில் அதைக் கொடுக்க — தலைமையமைச்சர் மீண்டும் அதை முதலமைச்சராகிய என்னிடமே அனுப்பிவைத்த அந்தக் கட்டமும், அதற்கும் பிறகு அவர்கள் நடத்திய ஊர்வலம் — அர்த்தால்கள் — சட்டமன்ற உறுப்பினர்களிடம் கொண்டுபோய்க் கொடுத்த மகஜர்கள், 'பவனி'கள் என்ற அடுக்கடுக்கான தோல்வியைக் கண்டு, இறுதியில் 'டிசம்பர் 2-ந் தேதி சட்டமன்றம் கூடும்' என்கின்ற அறிவிப்பு வந்த பிறகு — இதற்குப் பிறகு அவர்கள் எந்த நீதிமன்றத்துக்கும் போனாலும் — இதை விடப் பெரிய நீதிமன்றத்துக்குப் போனாலும் நம்முடைய பயணத்தில் சிற்சில தடங்கல்கள் ஏற்படலாமே தவிர, நம்முடைய பயணம் உறுதியானது — நிலையானது — கழக அரசு குலையாத திறனுடையது!

நண்பர் சேலம் மாரியப்பன் அவர்கள், 'கலைஞர்— அண்ணாவாகிவிட்டார்; இந்த நேரத்திலாவது அவர் கலைஞராகவே இருக்கவேண்டும்' என்று எடுத்துச் சொன்னார்.

கருணாநிதி என்றாலேயே, 'முரட்டுத்தனமானவர்' என்று அர்த்தமல்ல; 'பொறுமையாக இருக்க வேண்டும்' என்று சொல்வது எதற்கென்றால்— அண்ணா அவர்கள், 'பொறுத்தவர் பூமி ஆளுவார்' என்று சொல்லுவார் — அந்த முறையில நாம் பூமியை ஆள்கிறோம்; ஆகவேதான், 'பொறுத்துக்கொள்ள வேண்டும்' என்று சொல்கிறேன்.

'எதிர்க் கட்சியாக இருந்தபோதும் நாம் அடிபட்டோம் — இப்போதும் அடிபடவேண்டுமா?' என்று நண்பர்கள் கேட்கிறார்கள்,

அண்மையில் நடந்த வன்முறைகளையொட்டி, அதைத் தூண்டிவிட்டவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்; மேலும் வன்முறைகள் நடக்குமேயானால், அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்கும்.

கூட்டம் கூட்ட எம். ஜி. ஆரும் — குழப்பம் விளைவிக்க கம்யூனிஸ்டுகளும் — என்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்; இந்த நிலையிலும் முன்னேற்றக் கழகம் கொஞ்சமும் சிந்தவில்லை — சிதறவில்லை! சிறிய சேதாரம் தான் ஏற்படுகிறதே தவிர, எந்தவிதமான சீரழிவும் கழகத்திற்கு ஏற்படவில்லை!

(4-ம் பக்கம் பார்க்க)

கலைஞரை வழிமறித்துத் தாக்கத் திட்டம்

பொதுக்கூட்டம் நடத்த முடியாமல் மின்சார சப்ளை துண்டிப்பு

டிரான்ஸ்பார்மரை உடைத்து விட்டுக் காலிகள் அட்டகாசம்

சேலம், நவ. 30—

பரமத்தி வேலூரில் நேற்று முதலமைச்சர் கலைஞர் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று நடைபெறுவதாக இருந்தது; அந்தக் கூட்டத்தை நடைபெறாது செய்யக் கம்யூனிஸ்டுகளும்—எம். ஜி. ஆர். கட்சி ரசிகர்களும் மின்சார டிரான்ஸ்பார்மரைக் கொளுத்தி ஊரையே இருளில் ஆழ்த்தி விட்டனர்.

முதலமைச்சரின் காரை வழிமறித்து வன்முறையில் ஈடுபடவும் அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

சேலத்தில் நடைபெற்ற தி. மு. கழகச் செயல் வீரர்கள் கூட்டத்தை முடித்துக்கொண்டு—சேந்தமங்கலம் பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு—பரமத்தி வேலூர் பொதுக்கூட்டத்திற்குப் புறப்பட இருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றது.

சேந்தமங்கலம் கூட்டத்தை இரவு 9 மணிக்கு முடித்துக்கொண்டு சேலம் வேலூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு முதலமைச்சர் புறப்படத் தயாரானார்.

அந்த நேரத்தில் பரமத்தி வேலூரிலிருந்து, 'முதலமைச்சர் அங்கு வரவேண்டாம்' என்று போலீசு அதிகாரிகள் சேந்தமங்கலத்திற்குச் செய்தி தெரிவித்தனர்.

வலது கம்யூனிஸ்டுகளும், எம். ஜி. ஆர். கட்சியினரும் திட்டமிட்டு பரமத்தி வேலூரிலுள்ள மின்சார 'டிரான்ஸ்பாரமரை'க் கொளுத்தி ஊரெங்கும் இருட்டில் மூழ்கடித்து விட்டதுதான் இதற்குக் காரணமாகும்.

அந்தச் சமுக விரோதிகள் முதலமைச்சர் காரை வழிமறிப்பதற்கும் — அந்த இருட்டில் எது வேண்டுமானால் செய்வதற்கும் தயாராக இருந்தார்கள்.

டிரான்ஸ்பார்மர் எரிக்கப்பட்டு விட்டதால் — உடனடியாக மின் விளக்குகளை ஏற்றுவதற்கான வசதியில்லாத காரணத்தால், முதலமைச்சர் சேலம் வேலூருக்குச் செல்ல முடியாமல் சேலத்திற்கே திரும்பி வந்துவிட்டார்.

திட்டமிட்ட சதியில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிக்கப் போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

இராணுவத்தை சந்திப்போம் என்றும் கூறமாட்டோம் — கொள்கையை விட்டுவிட்டும் ஓடமாட்டோம்

மாநில சுயாட்சி பற்றிக் கலைஞர் — செய்தியாளர்களின் கேள்விகட்குப் பதில்

சேலம், நவ. 30—

'மாநில சுயாட்சிக் கொள்கையை நீங்கள் கைவிட்டு விடுவதாக மத்திய அரசிடம் ஒத்துக்கொண்டதாக எம்.ஜி. ஆர். பேசுகிறாரே — அதுபற்றித் தங்கள் கருத்து என்ன?"

என்று, சேலத்தில் முதலமைச்சரைச் செய்தியாளர்கள் வினவியபோது அவர் கூறியதாவது:—

"மாநில சுயாட்சிக்காக இராணுவத்தையும் சந்திப்போம் — என்கின்ற அளவுக்குத் தீவிரவாதிபோல் நாங்கள் பேசியதில்லை; அதை இப்போது விட்டுவிட்டு ஓடத்தேவையும் இல்லை; நாடாளுமன்ற முறையிலும் — சனநாயக முறையிலும் மாநில சுயாட்சிக் கருத்துக்களை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருவோம்."

(4-ம் பக்கம் பார்க்க)

செல்வத்தை பெருக்கும் போட்டியில் நாம் பின்தங்கியிருக்க முடியாது

[*]

இயற்கை வளம் தமிழகத்தில் ஏராளம் உண்டு--மனித சக்தியை முறைப்படுத்தி அதனைப் பயன்படுத்துவோம் -- பொருளாதாரத் துறையில் முன்னேறுவோம்

[*]

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முனைந்திருக்கிறோம் -- சத்துணவு அளிக்க வேண்டிய நிலையிலும் இருக்கிறோம்

நவீன தொழில் புரட்சி மூலம் சமுதாயத்தை மாற்றியமைப்போம் --- கருத்தரங்கில் முதலமைச்சர் கலைஞர் தெளிவுரை

சென்னை, நவ. 28—

"நவீன தொழில் புரட்சி நமது சமுதாயத்தை மாற்றியமைத்து வருகிறது; பழையனவெல்லாம் புதியனவாகி வருகின்றன!

"வளர்ந்துவரும் சமுதாய – பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப எல்லா நாடுகளும் தங்கள் இயற்கைச் செல்வங்களைப் பெருக்க நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன; எனவே, இந்தச் சூழ்நிலையில் நாமும் மற்றவர்களுக்குப் பின்தங்கிவிடாமல் நாட்டின் வளத்தைப் பெருக்க ஆவன செய்ய வேண்டும்.

"நம் நாட்டில் ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன; இயற்கை வளங்களும் நிரம்ப இருக்கின்றன; ஏராளமான மனித சக்தியும் இருக்கிறது. இந்த மனித சக்தியை முறைப்படுத்திப் பயிற்சி பெறச் செய்து -- ஆக்கத் துறைகளுக்கு அதனை நாம் பயன்படுத்த முடியும்; அப்படிப் பயன்படுத்தும் ஆற்றலும் நமக்கு உண்டு!

"இதனை நாம் செய்ய முடியும்; இந்த ஆற்றல்தான் நாட்டையும் -- நம் மாநிலத்தையும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையச் செய்யும்"

—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசு மீன் துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கடலோர மீன் வளர்ப்பு -- பொறிக்கல மீன் பிடிப்புப் பற்றிய கருத்தரங்கை, அடையாறு மைய டல் துறைப் பயிர்ச்சி நிலைய நேரு அரங்கில் முதலமைச்சர் கலைஞர் தொடங்கிவைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

கடல் வாணிபத்தில் தமிழகத்திற்குத் தனி இடம்

"தமிழகம் கடல் வாணிபத்தில் நீண்ட நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கி வந்திருக்கிறது; சேர--சோழ--பாண்டிய மன்னர்கள் உலகத்திலுள்ள மற்ற நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு கடல் வாணிபம் செய்திருக்கின்றனர்.

விலைமதிக்க முடியாத முத்துக்கள்—சங்குகள் போன்ற பொருட்களை ரோமாபுரி -- கிரேக்க நாட்டுக்கும் -- எகிப்து நாட்டுக்கும் ஏற்றுமதி செய்திருக்கின்றனர்; இதேபோல் படகு கட்டும் கலையிலும் அவர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர்.

மீன்பிடி முயற்சியில் ஈடுபட வேண்டும்

தமிழ்நாட்டில் இயற்கைவளங்கள் நிறைய உண்டு; மீன் வளத்தைப் பொறுத்த வரையில் அது உண்மையானதே; இந்துமாக் கடல் -- அரபிக்கடல் -- வங்கக் கடல் ஆகியவற்றில் மீன் வளம் நிறைந்து காணப்படுகிறது; இவற்றில் எல்லாம் நாம் மீன் பிடித்து வருகிறோம்; தற்போது பிடித்து வரும் மீன்களைப்போல் மூன்று நான்கு மடங்கு மீன்கள் பிடிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன; அதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும்.

வாய்ப்புகளை நாம் இழந்துவிடக்கூடாது

இந்தியாவிலுள்ள கடல் பகுதி அனைத்தும் இப்போது மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது; உலகம் முழுவதிலும் மீன் உற்பத்தி 70 இலட்சம் டன்களாகும்; இந்தியாவில் மட்டும் 1½ இலட்சம் டன் மீன்கள் கிடைக்கின்றன; இதில் 16 சதவிகித மீன்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்றன.

நாம் 1000 கிலோ மைல்களுக்குள் உள்ள மீன் வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை; முழுமையா[illegible] பயன்படுத்துவதற்கான [illegible] மேற்கொள்ளாவிட்டால் மற்ற நாடுகள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்படும்; அதை பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகள் இருக்கும்போது பயன்படுத்த வேண்டிய நிலை அவசியமாகிறது.

சத்துணவு அளிப்பது அவசியமல்லவா?

நமது நாட்டில் மக்கள் தொகை பெருக்கம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது; இந்த நிலையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில்நம்மை ஒப்படைத்துக்கொண்டிருக்கும் நாம், அவர்களுக்குச் சத்தான உணவினை அளிக்க வேண்டிய நிலையிலும் இருக்கிறோம்.

இயற்கை நமக்கு அளித்துள்ள சத்துணவுகளில் ஒன்றுதான் மீன் உணவு; மீன் உணவில் நமது உடல் ஆரோக்கியத்துக்குத்தேவையான புரோட்டின் சத்துக்கள் நிறைய இருக்கின்றன.

மக்கள் மிகக் குறைந்த அளவே புரோட்டின் உணவு உட்கொள்கிறார்கள்; ஆகவே புரோட்டின் சத்துள்ள மீன் உணவு வழங்கப்படவேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது; அதற்கான வாய்ப்பும் தேவையும் இருக்கும்போது எப்படி இத்தொழிலில் ஈடுபடுவது என்பது பற்றி ஆலோசிக்க வேண்டும்; இதில் தான், நவீன முறை மீன் பிடிப்பின் முக்கியத்துவமே அடங்கி உள்ளது.

கட்டுமரத்தின் மூலமே இனி வாழ இயலுமா?

நமது நாட்டில் மீன் பிடித்தொழில் பரம்பரை பரம்பரையாகப் பழமையான முறையிலேயே நடத்தப்பட்டு வருகிறது; கட்டுமரங்களில் சென்று மீன்பிடித்து -- அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்தும் மீனவர்கள் தான் மீன் பிடித்தொழிலில் பெரும்பான்மை அளவில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தியா முழுவதிலும் 94,000 கட்டுமரங்கள் இருக்கின்றன; இவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் 30,000 உள்ளன; அவற்றில் குறைந்த அளவுக்குத்தான் மீது பிடிக்க முடியும்; வாழ்வதற்கு ஒரு வழியாகத்தான் அது பயன்படுத்தப்படுகிறதே தவிர, ஒரு தொழிலாகப் பயன்படுத்தப்படுவது இல்லை.

கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள், காற்றுக்கும் -- புயலுக்கும் ஆட்பட்டுச் சிரமப்படும் சூழ்நிலை வேறு இருக்கிறது.

நவீன முறையில் சிறிய இயந்திரப் படகுகள்

ஆகவே, நவீன முறையில் அமைக்கப்பட்ட இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடிப்பது அவசியமாகிறது; அதற்கு நவீன முறையில் அமைக்கப்பட்ட இயந்திரப் படகுகளை நம் மீனவர்களுக்கு வழங்க வேண்டியது அவசியமாகிறது.

இயந்திரப் படகுகள் மட்டும் வழங்கினால் போதாது; தற்போது மீன் பிடிக்கக்கூடிய கட்டு மரங்களைப் பொருத்திக் கொடுக்க வேண்டும்.

சிறிய இயந்திரப் [illegible] பெரிய இயந்திர[illegible] மாற்றிக் கொடுக்க வேண்டும்; அதன் மூலம் ஆழ்கடலுக்குச் சென்று மீன் வள வாய்ப்புக்களை அறிந்துவர முடியும்; அத்தகைய படகுகள் கடற்கரையில் தங்குவதற்குத் தேவையான வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும்.

அளவு இனி உயரும்

தமிழ்நாட்டில் நவீன முறை மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான பணிகளில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் 1,300 விசைப் படகுகள் உள்ளன; 5-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 1,250 புதிய விசைப் படகுகளை அறிமுகப்படுத்த இருக்கிறோம்

இத்தகைய பணிகளால் தமிழ்நாட்டு மீன் உற்பத்தி 1.70 இலட்சம் டன்கள் என்ற அளவிலிருந்து 5 இலட்சம் டன்கள் என்ற அளவில் உயரக்கூடும்.

உரிய வசதி அளிக்க மத்திய அரசுமுன்வரும்

விரைவிலேயே நமது மீன்பிடி படகுகள் சர்வதேச கடல் பகுதிகளுக்குச் சென்று மீன் பிடிக்கும் காலம் வரப்போகிறது; இதற்குச் சக்திவாய்ந்த பெரிய கப்பல்கள் நமக்குத் தேவைப்படுகிறது; இப்படிப்பட்ட கப்பல்களைப் பெற மத்திய அரசு மாநில அரசுக்கு நிதியுதவியும் -- மற்ற வசதிகளும் அளிக்கும் என நம்புகிறேன்.

எத்தனையோ நாடுகள் சர்வதேச மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துச் செல்லும்போது நாம் எப்போதோதான் மீன் பிடித்து வருகிறோம்; ஆகவே நாம் சர்வதேச மீன் பிடிப் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கான திட்டத்தைத் தீட்டி ஈடுபட வேண்டும். அதற்கான பெரிய மீன் பிடிப் படகுகளை நாம் பெற வேண்டும் என்பது என் அவாவாகும்.

இவற்றின் மூலம் நமது கடற்கரையோட்டி சர்வதேசக் கடல் பகுதிகளில் எங்கெங்கு மீன்வளம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து ஏராளமான மீன்களைப் பிடிக்க முடியும். அதனால் ஏராளமான அந்நியச் செலாவணியை நாம் பெற முடியும்; இப்போது அவையெல்லாம் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டு இருக்கின்றன.

தொழில் நுட்பம் தேவைப்படுகிறது

விரைவில் அதனைப் பெறுவோம் -- மீன்பிடி படகுகள் கட்டுவோம்

மண்டபத்தில் முற்றிலும் நவீன இயந்திர வசதிகளுடன் கூடிய நடுத்தர மீன்பிடிப் படகுகள் கட்டும் திட்டத்தைத் தீட்டியுள்ளோம். 76 அடி முதல் 110 அடி வரை உள்ளதாக அந்த மீன்பிடி படகுகள் இருக்கும்.

அப்படிப்பட்ட படகுகளைக் கட்டுவதற்கான தொழில்நுட்பம் தேவைப்படுகிறது; அதைப் பெற்று விரைவிலேயே மீன்பிடி விசைப் படகுகள் தயாரிப்பதற்காகப் பொதுத்துறையில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த இருக்கிறோம். மத்திய அரசு இதற்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இதன் மூலம் மீன்பிடி படகுகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குப் பதில் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்ய முடியும்.

நவீன இயந்திரப் படகுகள் மூலம் மீன்பிடி தொழிலை வளர்க்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்போது, பாரம்பரியமாகக் கட்டுமரத்தில் சென்று மீன் பிடித்து வாழ்க்கை நடத்துவோர் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்படுவது அவசியமாகும்."

ஆளுநர் கே. கே. ஷா

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த ஆளுநர் கே. கே. ஷா, தமது தலைமையுரையில், மீன் பிடித் துறையில் உலகில் இந்தியா ஏழாவது இடத்தைப் பெற்றுள்ளது என்றும், மீன் பிடித் தொழில் வளர்ச்சியடைவதன் மூலம் வளர்ந்து வரும் மக்கள் தொகையினருக்கு வேண்டிய சத்துணவு வழங்க இயலும் என்றும் கூறினார்.

"நவீன வசதிகளுடன் கூடிய படகுகளை கொண்டு மீன் பிடிப்பதன் மூலம் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும்" என்றும் அவர் சொன்னார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து

கருத்தரங்கில் மீன் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அளித்த குறிப்புரையில், 'கடலோர மீன் வளர்ப்புக்கு ஐந்தாவது திட்ட காலத்தில் ரூ. 50 இலட்சமும், 6-வது திட்டக் காலத்தில் ரூ 200 இலட்சமும் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது' என்று கூறப்பட்டிருந்தது.

"கடலோர மீன் பிடிப்புக்கு என பெரிய திட்டமொன்றை விரைவில் தமிழக அரசு செயல்படுத்தும்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழக அரசின் கூட்டுச் செயலாளர் பி. கந்தசாமி அனைவரையும் வரவேற்றார்.

மீன்துறை இயக்குநர் டி. வி. வெங்கட்ராமன் நன்றி கூறினார்.

அண்ணியார் இராணி அம்மாள் வழக்கு

எழுத்து மூலம் பதில் தாக்கல் செய்ய எம். ஜி. ஆருக்கு நீதிபதி உத்தரவு

டிச. 21-ந் தேதிக்கு வழக்குத் தள்ளிவைப்பு

சென்னை, நவ. 30—

எம் ஜி.ஆர். தொடங்யுள்ள கட்சிக்கு 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயரிடப்பட்டிருப்பதும் -- கட்சிக் கொடியில் அண்ணாவின் உருவப்படம் இடம்பெற்றிருப்பதும் தெரிந்திருக்கும்.

அண்ணா அவர்களின் பெயரை எம் ஜி.ஆர். தன் கட்சியின் பெயரில் பயன்படுத்துவதற்கும் -- படத்தைக் கொடியில் பொறிப்பதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணியார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

இந்த வழக்கில் எம். ஜி.ஆர். அண்ணாவின் பெயரையும் -- படத்தையும் பயன்படுத்த தனக்கு உரிமை இருப்பதாகப் பதில் பிரமாணம் பத்திரம் தா[illegible]கல் செய்திருந்தார்.

நேற்று இந்த வழக்குமீண்டும் சென்னை 6-வது சிட்டி சிவில் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது; திருமதி இராணியார் மனுவில் கூறப்பட்டுள்ளவைகளுக்கு, எம். ஜி.ஆர். தரப்பில் பதில் அளிக்கும் படி நீதிபதி சொக்கலிங்கம் கூறினார்.

"இராணி அம்மாளின் மனுவின் நகல் தங்களுக்குக் கிடைக்காததால், இதுவரை பதில் தாக்கல் செய்ய முடியவில்லை" என்று எம். ஜி. ஆர். தரப்பு வழக்குரைஞர் கூறினார்.

இப்போது எம். ஜி. ஆருக்கு இராணி அம்மாள் மனுவின் நகல் கொடுக்கப்பட்டு விட்டது; எனவே அவருடைய மனுவில் குறிப்பிடுள்ளவைகளுக்கு எழுத்து மூலம் எம் ஜி.ஆர். பதில் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிமதி உத்தரவிட்டார்.

பதில் தாக்கல்செய்ய அவகாசம் வேண்டும் என்று எம் ஜி.ஆர். தரப்பு வக்கீல் கேட்டுக் கொண்டதன் மீது வழக்கு விசாரணை டிசம்பர் 21-ந் தேதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

இதேபோல், ஆயிரம் விளக்கை சேர்ந்த இராகவலு என்பவர் எம். ஜி. ஆர். மீது தொடர்ந்துள்ள வழக்கும் நேற்று விசாரணைக்கு வந்தது; அந்த வழக்கும் அடுத்த மாதம் 21-ந் தேதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

இராணி அம்மாள் -- இராகவலு ஆகியோர் சார்பில் வழக்குரைஞர் வி. நாராயணசாமி வாதாடினார்.

சென்னை -- ஐதராபாத்தில் முன்னோடி தொழி[illegible] நிலையங்கள்

புது[illegible], நவ. 28—

"சென்னையிலும், ஐதராபாத்திலும் முன்னோடித் தொழில் நிலையங்களை அமைப்பது குறித்துத் தேசிய சிறு தொழில் கார்ப்பரேஷன் கூறியிருந்த ஆலோசனையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது; இவை தோல் -- காலணி இயந்திரங்கள், மின்னணுக் கருவிகள் சம்பந்தமான பயிற்சி -- உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபடவிருக்கும் முன்னோடி நிலையங்களாகும்"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் வி. மாயவனின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தொழில் வளர்ச்சித் துணையமைச்சர் பேராசிரியர் சித்தேஷ்வர் பிரசாத் தெரிவித்தார்.

வசூலாக வேண்டிய வருமான வரி பாக்கி

ரூ.438.60 கோடி எனத் தகவல்

புதுடில்லி, நவ. 28—

"இந்த ஆண்டு மார்ச் 31-ந் தேதி வரையில் வசூலாக வேண்டிய வருமான வரி பாக்கி ரூ. 438.60 கோடியாகும்"

என்ற தகவலை நாடாளுமன்றத்தில் நிதித்துறை இணையமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர், 'இந்தியாவில் ரூ 1-கோடிக்குமேல் வருமான வரி பாக்கி செலுத்தவேண்டியிருப்பவர்கள் 10 பேர்களாகும்' என்றும் தெரிவித்தார்.

அந்தப் பத்து பேர்கள் யார் என்ற விவரமும் -- அவர்கள் செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கியும் வருமாறு:—

ஜே. தர்மதேஜா ரூ. 4,26,70,000.

ஆர். பி. ஸ்ரீராம் துர்கா பிரசாத் பிரைவேட் லிமிடெட் ரூ. 2,43,53,000.

அரிதாஸ்முந்திரா ரூ.2,29,73,000

கெரோடிமல் லோகரிவாலா ரூ. 1,49,27,000.

அக்திவால் ஜெட் டெபில் பிரேட்டர் ரூ. 1,41,31,000.

சுரஜ்மல் நகர்மல் ரூ.1,39,01,000

ஆர். டால்மியா ரூ. 1,35,33,000.

ஆதம் காஜி பீர் முகம்மது ஈசாக் ரூ. 1,19,52,000.

ராம்நாத் பஜோரியா ரூ. 1,16,53,000.

டால்மியா சிமெண்டு அண்ட் பேப்பர் மார்க்கெட்டிங் கம்பெனி ரூ. 1,11,93,000.

இவர்களில் ஆதம் காஜி பீர் முகமது ஈசாக், பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார்; அவருடைய சொத்துக்கள் முடக்கப்பட்டிருக்கின்றன.

மற்றவர்கள் கொடுக்க வேண்டிய வரி பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சாரணர் இயக்கத்தில் இளைஞர் சமுதாயம்

ஆளுநர் கே. கே. ஷா யோசனை

சென்னை, நவ. 29—

"தமிழகத்தில் 10-லிருந்து 18 வயது வரையிலுள்ள சுமார் 5 இலட்சம் இளைஞர்களையும் -- பெண்களையும் சாரணர் இயக்கத்தில் சேர்த்தால் மிகச் சிறந்த சமூகத் தொண்டர் படை உருவாகும்.

"சமூக நீதி மக்களுக்குக் கிடைக்கச் செய்வதிலும், அனைவரின் உரிமைகளையும் பேணிக் காப்பதிலும் சனநாயகப் பண்போடு அவர்கள் தொண்டாற்ற முடியும்"

என்று தமிழக ஆளுநர் கே. கே. ஷா கருத்தறிவித்தார்.

சாரணர் இயக்கத்தில் மிக உயர்ந்த தகுதியைக் காட்டும் விருது தமிழகத்தைச் சேர்ந்த 20 சிறுவருக்கும் -- 30 பெண்களுக்கும் வழங்கப்பட்டது.

மாநிலத் தலைமைச் சாரணக் கமிஷனர் எஸ். வி. சிட்டிபாபு வரவேற்றார்.

தமிழகச் சட்டமன்றச் செயலாளரும் -- இந்திய சாரணத் தலைமைக் கமிஷனருமான சி. டி. நடராசன் விருது பெற்றோரைப் பாராட்டிப் பேசினார்.

இந்தியாவின் வன வளம்

இந்திய வனங்கள் 750 இலட்சம் ஹெக்டேர்களுக்கும் அதிகமான நிலத்தில் அமைந்துள்ளன; இது, நாட்டின் நிலப் பரப்பில் 23 சதவிகிதமாகும்; தேசிய வனக் கொள்கை, நாட்டின் நிலப் பரப்பில் 33 சதவிகிதம் காடுகளாக இருக்க வேண்டுமென்று வரையறுத்துள்ளது; இது வன விலங்குகளைப் பாதுகாப்பதுடன் வெள்ளத்தையும் தடுக்கும்.

நாட்டு மக்களின் பயனுக்கு மரத்தையும், எரி--பொருளை[illegible] காடுகள் அளிக்கும்.

செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்ட வனங்கள், 11 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில் அமைந்துள்ளன.

இந்தியக் காடுகளில் சுமார் 15,000 செடி வகைகளும், 2,000 பறவை வகைகளும், 500 பாலூட்டி மிருக வகைகளும், 30,000 பூச்சி வகைகளும் காணப்படுகின்றன.

காடுகள் -- இயற்கைப் பேரிடர்களைச் சமாளிக்க இயற்கையே அளித்த மிகப்பெரும் பாதுகாப்பு ஆகும்; இவை, உழவர்களின் தலைசிறந்த நண்பர்களாகும்.

மாணவ -- மாணவியர் அணியும் உடைகள்

உத்தரவு பிறப்பிக்க வேண்டியவர்கள் யார்?

புதுடில்லி, நவ. 28—

"கல்லூரிகளில் மாணவிகள் குட்டை பாவாடையும், மாணவர்கள் இறுக்கமான கால் சட்டையும் (டைட் பேன்ட்) அணிவது பெருகி வருகிறது; இதைத் தடுத்து -- இந்தியக் கலாச்சார முறைப்படி உடை அணிய ஏற்பாடு செய்யப்படுமா?'

என்று மக்களவையில் கேள்வி நேரத்தின்போது தன்ஷா பிரதான் என்பவர் வினவினார்.

இதற்குப் பதிலளிக்கையில், கல்வித்துறை துணையமைச்சர் டி. பி. யாதவ் கூறியதாவது:—

"மாணவிகள் -- மாணவர்களின் உடைகளுக்குத் தடை விதிக்க முடியாது; அதில் அரசாங்கம் தலையிடுவதற்கு இல்லை; நாகரீகத்திற்கு ஏற்றவாறு சில மாறுதல்கள் ஏற்படும்; ஆனால் இந்த மாறுதல்களினால் நம் நாட்டுக் கலாச்சாரம் பாதிக்கப்படாது.

மாணவிகள் --- மாணவர்கள் அணிய வேண்டிய உடை பற்றி உத்தரவு பிறப்பிக்க வேண்டியது கல்வி நிறுவனங்கள்தான்; அவர்கள்தான் சீருடை பற்றி முடிவு செய்ய வேண்டும்.

இறுக்கமான கால் சட்டை அணிவதை மாணவர்கள் அதிக அளவில் விரும்புகிறார்கள்; ஆனால் குட்டைப்பாவாடை அணிவதை மாணவிகள் அதிக அளவில் விரும்பவில்லை."

சொத்துப் பிரச்சினை: எம். ஜி. ஆருக்கு அறைகூவல்

நாடறிந்த உண்மையைத் திரித்துக் கூறுவதா?

மக்களிடம் தவறாக என்னைப் பற்றிச் சித்தரிப்பதா?

கலைஞர் கேள்வி--அறைகூவலுக்கு மழுப்பாமல் பதில் கூற எம்.ஜி.ஆர். முன்வருவாரா?

சேலம், நவ. 30—

"பதவியைப் பயன்படுத்திக் கோடிக்கணக்கில் நான் சொத்துச் சேர்த்து வைத்திருப்பதாக எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்துவருகிறார்; நான், அவருக்கு அறைகூவல் விடுக்கிறேன் -- என்னுடையவும் -- குடும்பத்தினருடைய சொத்துக்களையும் [illegible]. 10 இலட்சத்திற்கு வாங்கிக் கொள்ள எம்.ஜி.ஆர். தயாரா?" எங்களுக்குள்ள கடன்களையும் அவர் அடைத்துவிடத் தயாரா?"

என்று முதலமைச்சர் அவர்கள் அறைகூவல் விடுத்தார்; இத்தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது:—

"1950-ம் ஆண்டு முதல் நான் 35-க்கு மேற்பட்ட திரைப் படங்களுக்குக் கதை -- வசனம் எழுதியிருக்கிறேன்; சொந்தமாகவும் பல படங்கள் தயாரித்து வெளியிட்டிருக்கிறேன்.

என் மருமகன் முரசொலி மாறன் 20 படங்களுக்கு மேல் கதை -- வசனம் எழுதியிருக்கிறார்; சொந்தமாகவும் சில படங்கள் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்.

இன்னொரு மருமகன் அமிர்தம் சுமார் 20 படங்களுக்கு மேலாக ஒலிப்பதிவாளராக[illegible] பணியாற்றியிருக்கிறார்.

என் மகன் முத்துவும் [illegible]ல நாடகங்களில் நடிப்பதோடு இப்போது படங்களிலும் நடித்துவருகிறார்.

இந்த நிலையில் எங்கள் குடும்பத்தினர் கலைத் துறையில் ஈடுபட்டுப் பொருளீட்டியிருப்பது நாடறிந்த உண்மையாகும்.

ஆனால் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், நான் அமைச்சர் பதவியைப் பயன்படுத்திக் கொண்டு -- மக்களின் வரிப் பணத்தில் ஊழல் செய்து -- இலஞ்சம் வாங்கிக் கோடிக் கணக்கில் சொத்துச் சேர்த்து வைத்திருப்பதாகப் பிரசாரம் செய்துவருகிறார்; வேண்டுமென்றே திட்டமிட்டு என்னை ஊழல் பேர்வழியாக -- இலஞ்சம் வாங்குபவனாக மக்களிடம் சித்தரித்து வருகிறார்.

நான் அவருக்கு ஓர் அறைகூவல் விடுக்கிறேன்: யார் யார் என் குடும்பத்தினர் என்று அவர் கூறுகிறாரோ அவர்களுடைய சொத்து -- என் சொத்து முழுவதையும் ரூ. 10 இலட்சத்திற்கு எம். ஜி. ஆர். அவர்கள் வாங்கிக்கொள்ளத் தயாரா? எங்களுக்குள்ள கடன்களையும் அந்த ரூ. 10 இலட்சத்திற்குள்ளேயே அவர் அடைத்து விடட்டும்; அவ்வளவு பணம் இப்பொழுது தன்னிடம் இல்லை என்று அவர் சொல்லக்கூடும்; தவணைமுறை கொடுத்தால் கூடப் போதும்; அந்தப் பணத்தில் ரூ. 5 இலட்சத்தை தி. மு. கழகத்துக்குக் கொடுத்துவிடத் தயாராக இருக்கிறேன்.

அல்லது, நான் குறிப்பிடும் அவருடைய குடும்பத்தினர் சொத்துக்களை ரூ. 20 இலட்சத்திற்கு விற்க அவர் தயாராக இருக்கிறாரா?

அதற்கு அவர் ஒப்புக்கொண்டால், தி. மு. கழகத்தின் சார்பில் நிதி வசூலித்து அந்த பணத்தைத் தவணை முறையில் கட்ட -- 'கழகத் தலைவன்' என்ற முறையில் நான் தயாராக இருக்கிறேன்.

இந்த என் அறைகூவலுக்கு மழுப்பாமல் அவர் நேரடியாகப் பதில் கூற வேண்டும்."

துணி வியாபாரத்தில் கொள்ளை இலாபம்

மத்திய அமைச்சர் கடும் எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 29—

"செயற்கை இழை – கலப்பு இழைத் துணிகளில் கொள்ளை இலாபமடிப்பதைத் தடுப்பதற்கு அவசியமானால் விலைக் கட்டுப்பாடு கொண்டுவரவும் அரசு தயங்காது"

என்று வெளிநாட்டு வாணிபத் துறை அமைச்சர் எல்.என்.மிஸ்ரா நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

'இதில் ஓரளவு இலாபமடிக்கிறார்கள்' என்பதை ஒப்புக்கொண்ட அமைச்சர், இத்தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:—

"செயற்கை நூலிழைத் துணிகளின் அடக்கச் செலவுகளை ஆராயுமாறு அரசு காப்பு வரிக் கமிஷனைக் கேட்டுக் கொண்டது; அதன் அறிக்கை வந்துள்ளது; ஆனால் மேலும் சில பிரச்சினைகள் குறித்துக் காப்பு வரிக் கமிஷனின் கருத்துக் கோரப்பட்டுள்ளது; அதனிடமிருந்து பதில் கிடைத்ததும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

நெசவாளருக்கும் -- நூற்பாளருக்குமிடையே விருப்பபூர்வமான அடிப்படையில் ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன; விலை பற்றிக் காப்பு வரிக் கமிஷன் செய்துள்ள சிபாரிசு சில துறைகளில் அந்த ஒப்பந்தங்களைவிடக் கூடுதலாக இருக்கின்றன; சிலவற்றில் குறைவாக இருக்கின்றன.

சுயநலக்காரர்கள் காப்பு வரிக் கமிஷன் அறிக்கையை வெளியிடவிடாமல் நிர்ப்பந்தம் கொண்டு வருவதாகச் சொல்லப்படுவது உண்மையானதன்று!"

கடந்த சில வாரங்களில் நூல் விலைகள் உயர்ந்துள்ளதன் விளைவாக நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப் பற்றிக் கேட்கப்பட்டபோது அமைச்சர் கூறியதாவது:—

"நூலில் பதுக்கலோ, கொள்ளை இலாபமடித்தலோ நடந்தால் இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது."

எம். ஜி. ஆர். கூற்றுக்கு மறுப்பு

'உண்மைக்குப் புறம்பாக திரித்துக் கூறப்பட்ட செய்தி'

நாவலர் கருத்து நிலை விளக்கம்

சென்[illegible], நவ. 30—

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சில நாட்களுக்கு[illegible]ன் நிருபர்களிடம் கூறியதை மறுத்து கல்வி அமைச்சர் நாவலர் [illegible], நெடுஞ்செழியன் அவர்கள் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

"எம். ஜி. ஆர். செய்தித் தாள் நிருபர்களிடம் பேசும்போது, 'உலகம் சுற்றிய வாலிபன்' படப்பிடிப்புக்கு வெளிநாடுகளுக்குச் சென்ற வகையில் அந்நியச் செலாவணி விவகாரத்தில் எம். ஜி. ஆர். மீது வழக்குப் போடப்பட்டது; இதனை எதிர்த்து எம். ஜி. ஆர். உயர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை வாங்கினார்; பிறகு என்ன நடந்தது என்று தெரியாது; எம். ஜி. ஆர். வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்: மத்திய அரசு மேற்கொண்டு எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை' என்று நான் ஏதோ ஒரு கூட்டத்தில் பேசியதாக -- ஏதோ ஒரு செய்தித் தாளில் செய்தி வந்[illegible]ப்பதாகக் கூறியிருக்கிறார்.

அப்படிப்பட்ட செய்தி எந்தச் செய்தித் தாளில் வந்திருக்கிறது என்று எனக்குத் திட்டவட்டமாகத் தெரியவில்லை; [illegible] படியே செய்தி வந்திரு[illegible]லும் அது வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்ட உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்.

'உலகம் சுற்றிய வாலிபன்' படப்பிடிப்புக்கு வெளிநாடுகளுக்குச் சென்ற வகையில் அந்நியச் செலாவணி விவகாரத்தில் எம். ஜி. ஆர். மீது வழக்கு போடப்பட்டதாக எந்த ஒரு கூட்டத்திலும் நான் சொல்லியதில்லை.

எம். ஜி.ஆர். அவர்கள் வருமான வரி பாக்கிக்காகப் பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் கட்ட வேண்டுமென்று வருமான வரி இலாகா அவருக்குத் தாக்கீது பிறப்பித்திருக்கிறது என்றும், 'தவணை முறையை ரத்து செய்துவிடப்போகிறீர்கள்; எப்படியாவது நான் கட்டிவிடுகிறேன்' என்று அவர் வருமானவரி இலாகாவுக்குத் தெரிவித்திருக்கிறார் என்றும், 'தவணைப்படி கட்டாவிட்டால் உங்கள் சொத்துக்கள் மீது ஜப்தி வரும்' என்று வருமான வரி இலாகாவினர் தாக்கீது மூலம் மிரட்டியிருக்கிறார்கள் என்றும், 'வருமான வரிச் சட்டம் 221-ன் பிரிவின்படி நீங்கள் நிபந்தனைகளை மீறிய காரணங்களுக்காக ஏன் உங்களுக்குத் தண்டனை அளிக்கக் கூடாது' என்ற தாக்கீது (ஷோகாஸ் நோட்டீசு) வருமான வரி இலாகாவால் அனுப்பப்பட்டிருக்கிறது [illegible]ன்றும், பிறகு எம் ஜி. ஆர். 1972 ஆம் ஆண்டு 486-[illegible] எண் ரிட்டில் 'ஸ்டே' கோரி உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' போட்டார் என்றும், ஆனால் அதற்குப் பிறகு சில காலம் கழித்து அந்த 'ரிட்' மனு திரும்பப் பெறப்பட்டது எனச் சொல்லப்படுகிறது என்றும், 'இடையில் என்ன நடந்ததோ -- ஏது நடந்ததோ என்று தெரியவில்லை' என்றுதான் நான் கூட்டங்களில் குறிப்பிட்டேன்.

அந்நியச் செலாவணி பற்றி குறிப்பிடும்போது, 'உலகம் சுற்றிய வாலிபன்' படங்களை வெளிநாடுகளில் எடுக்கத் திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்கு அந்நியச் செலாவணி -- நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றாத வகையில் அவருக்குச் சில சலுகைகளை மத்திய அரசு வழங்கியிருக்கிறது என்றும், அது பற்றிய தகராறு இருந்து வருகிறது என்றும்தான் நான் குறிப்பிட்டேன்."

இ. காங்கிரசு ஆட்சியில்தான் இந்த நிலைமை

கல்கத்[illegible], நவ. 29—

மேற்கு வங்காள முதலமைச்சர் சித்தார்த்த சங்கர் ரே, தமது அமைச்சரவையிலுள்ள அமைச்சர்கள் யாராவது தொழிற் சங்கங்களில் பதவி வகித்தால் அதை இராஜினாமாச் செய்துவிடவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

ஐந்து அமைச்சர்கள் பல்வேறு தொழிற்சங்கங்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அவற்றிலிருந்து விலகவும் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் முதலமைச்சர் நிருபர்களிடம் கூறினார்.

'மதியழகனே - இராஜிநாமா செய்க'

வீட்டு முன் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

156 பேர் கைது செய்யப்பட்டனர்

சென்னை, நவ. 30—

178 சட்டப்பேரவை உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட சபாநாயகர் மதியழகன் தமது பதவியை இராஜிநாமா செய்யவேண்டும் என்று கோரி நேற்று அவர் வீட்டு முன் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடற்கரையில் உள்ள அண்ணா கல்லறையிலிருந்து 1500 மாணவர்கள் புறப்பட்டு மதியழகன் வீடு நோக்கிச் சென்றனர்.

மதியழகன் வீட்டுக்கு அரை பர்லாங் தூரத்தில் உள்ள ஆடம் சாலை சந்திப்பு வரை ஊர்வலம் செல்ல போலீசார் அனுமதி அளித்திருந்தனர்; அந்த இடத்தை அடைந்ததும் போலீசார் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினர்.

நகரில் போலீசுத் தடை உத்தரவு இருப்பதால் கலைந்து செல்லுமாறு போலீசார் [illegible]கேட்டுக்கொண்டனர்.

போலீசுத் தடையையும் மீறி மதியழகன் வீட்டை நோக்கிச் சென்ற 156 பேரைப் போலீசார் கைது செய்து லாரியில் ஏற்றிச் சென்றனர்.

மதியழகன் தொடர்ந்த வழக்கு

சென்னை, நவ. 30—

சட்டமன்றக் கூட்டத் தொடரை ரத்து செய்து (புரோரோக் செய்து) ஆளுநர் பிறப்பித்த உத்தரவு செல்லாது என்று சபாநாயகர் கே. ஏ. மதியழகன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்து வழக்குரைஞர் வி. பி. இராமனின் வாதம் நேற்று முன்தினம் பிற்பகலுடன் முடிவடைந்தது.

பின்னர், தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் - சட்டமன்றச் செயலாளர் ஆகியோர் சார்பில் அட்வகேட் - ஜெனரல் எஸ். கோவிந்தசாமி நாதன் விவாதம் செய்தார்.

அடுத்து, ஆளுநர் சார்பில் ஆஜரான எம். கே. நம்பியார் விவாதம் தொடங்கினர்.

மூன்றாவது நாளாக நேற்றும் அவர் விவாதம் செய்தார்; விவாதம் முடிவடையாத நிலையில் இன்றும் அவர் [illegible]தொடர்ந்து விவாதித்துக்கொண்டி[illegible]ருக்கிறார்.

நடக்க [illegible]இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

1—12—72

சென்னை 8 வது வட்டம்

அண்ணா நினைவு மன்ற ஆண்டு விழா மாலை 7-மணிக்கு இராயபுரம் ஆதம்சாயபு தெரு காவல் நிலையம் அருகில்; தலைவர்: புலவர் கே. முனிய[illegible]ன்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கோவை இராமநாதன் எம்.எல்.ஏ., புலவர் பொன்னிவளவன், மூ. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், இரா. மூ. மனோகரன் எம்.சி., கு. இராமலிங்கம், சு. இராமதாசு, ஆர். எல். லிங்கர[illegible]சு, சு. மாலன் மற்றும் பலர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் - முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"சட்டமன்றம் 2-ந் தேதி கூடுகிறதே - அப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருமா?"

பதில்:—"அதுபற்றி இப்பொழுது நான் எதுவும் சொல்லக் கூடாது."

கேள்வி:—"கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரம் திருநெல்வேலியில் பேசும்போது, அமைதி காக்கும் படை அமைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறாரே - போலீசாரிடமிருந்து மக்களைக் காப்பாற்ற......"

பதில்:—"ஒன்றும் சொல்வதற்கில்லை."

இரயில்வே அமைச்சர் திட்டத்திற்கு ஆதரவு

கேள்வி:—"நேற்று டில்லியில் மேசிய இரயில்வே அமைச்சராய், இப்பொழுது இரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்படுவதால், அதற்காக எல்லா மாநில முதலமைச்சர்களுடனும் கலந்தாலோசித்தும் பாதுகாப்புக் கேட்க எண்ணியிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறாரே - அது பற்றி உங்கள் கருத்து என்ன?"

பதில்:—"அரசாங்கச் சார்புடைய இரயில்-பஸ் போக்குவரத்துக்கள் தாக்குதலுக்கு உள்ளாவது வருந்தத்தக்க ஒன்றாகும்; 'தேசியமயக் கொள்கைக்கு விரோதமாகச் செயல்படுகிறார்களோ' என்று கூட எண்ணத்தோன்றுகிறது; சோஷலிசம்-கம்யூனிசம் பேசுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள், தேசியமயமாக்கப்பட்ட அரசுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது தனியுடைமைத் தத்துவத்திற்கு ஆக்கம் சேர்க்க மறைமுகமாகச் செயல்படுவது போல் தோன்றுகிறது; இது பற்றி மத்திய அமைச்சர் எடுக்கும் ஆக்கப்பூர்வமான முயற்சிக்குத் தமிழ்நாடு அரசு உரிய ஆதரவினைத் தரும்."

தூண்டி விடுவோர் கண்காணிக்கப்படுவர்

கேள்வி:—"சில நாட்களாகப் புதிதாக எதுவும் நடக்காவிட்டாலும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்களே - இவர்களின் தூண்டுதலால்தான் அப்படிச் செய்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?"

பதில்:—"மாணவர்கள் அமைதியின்மை எங்கும்இருக்கிறது; தூண்டிவிடுகி[illegible]ன் யாராக இருந்தாலும், [illegible]ர்களைப் போலீசார் க[illegible]த்து வருகிறார்கள்; [illegible]வர்கள்மீது வழக்குகளும் பதிவு செய்யப்படுகின்றன."

மறைவு

சென்னை, நவ. 30—

சென்னை இராயபுரம் கழகத் தோழர் வி. டி. அரசு அவர்களின் தந்தையாரும், வர்த்தகருமான பி. எஸ். வேலாயுதனார் இன்று காலை இயற்கையெய்தினார் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

எழுபத்தாறில்தான் அடுத்த தேர்தல்— எதிரிகளின் கனவு பலிக்காது!

கழக ஆட்சியே நீடித்து நிலைக்கும்

ஏழையின் வாழ்வில் இருள் அகற்றும் ஒளிவிளக்காக தி.மு.க.- முதலமைச்சர் கலைஞர் நிலைமை விளக்கம்

சேந்தமங்கலம், நவ. 30—

"பல்வேறு சாதனைகளைச் செய்த கழக அரசைக் கவிழ்க்க மேட்டுக்குடியினரும், பத்திரிகைக்காரர்களும் முயற்சிக்கின்றனர்; ஆயினும், மக்கள் நலன் காக்கும் தி. மு. கழகத்தின் தலைவர்களும்—தொண்டர்களும் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத் தங்களது இன்னுயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறார்கள்!

"'இந்த மந்திரிசபை நிலைக்காது - கவிழ்ந்துவிடும்; இந்தச் சட்டமன்றம் எதிர்காலத்தில் இனிமேல் எப்போதும் கூடவே கூடாது' என்றெல்லாம் பேசுகிறார்கள்; அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன் - 'சட்டமன்றமும் நடக்கும் - இந்த மந்திரி சபையும் நிலைக்கும்' என்று!

"1976-ல்தான் அடுத்த தேர்தல் நடக்கும், 1971-ல் சனநாயக ரீதியில் - ஓட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டதால் இந்த ஆட்சி 1976 வரையில் நீடிக்கும்— நடக்கும்!

"பொதுமக்களே! தி. மு. கழகம் வேறு - நீங்கள் வேறு அல்லர்! நீங்கள்தான் தி. மு. க.! ஏழைகளின் எண்ணங்களை - இலட்சியங்களை நிறைவேற்றும் வேலைக்காரன் தி. மு. க.! ஏழை வாழ்வில் இருள் அகற்றும் விளக்கு தி. மு. க.! ஆகவே அதைக் காக்க வேண்டிய தலையாய பொறுப்பு மக்களுடையதாகும்"

என்று கழகத் தலைவரும் - முதலமைச்சருமான கலைஞர் அவர்கள், நேற்று சேந்தமங்கலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு, திரு. சின்ன வெள்ளையன் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

தோழர்கள் பெரியண்ணன், ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., குப்புசாமி, அமைச்சர் க. இராசாராம் ஆகியோர் பேசினர்.

இறுதியில் முதலமைச்சர் கலைஞர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாட்டில் இன்றையத் தினம், கருத்துக்குக் கருத்து - கொள்கைக்குக் கொள்கை - எழுத்துக்கு எழுத்து - [illegible]வாதத்துக்கு விவாதம் என்ற வகையில் பிற அரசியல் கட்சிகள் நடந்து கொள்ளவில்லை என்று இங்கே நண்பர்கள் குற்றஞ் சாட்டினர்.

நமது கருத்துக்களைச் சந்திக்க முடியாமல் - நமது பேச்சுக்குப் பதில் சொல்ல முடியாமல் - நமது எழுத்தை எழுத்தால் சந்திக்க முடியாமல் வேறு முறைகளைக் கையாளுகிறார்கள்.

தமிழ்நாட்டில் எழுத்துக்கு - பேச்சுக்குக் குறைவில்லை என்றாலும், வன்முறையை நாடிச் சிலர் செல்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் போராட்டங்களைப் பற்றிக் கூறும்போது, 'போராட்டங்களைத் தேடி அலையமாட்டேன் - கிடைத்த போராட்டங்களை விடவும் மாட்டேன்' என்றார்.

ஆனால், அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டவர்கள், 'நாளுக்கு ஒரு போராட்டம்' என்று தினந்தோறும் போராட்டத்தைத் தேடி அலைகிறார்கள்!

அது மட்டுமல்ல - அண்ணாவின் அரசியல் நுழைவிற்கு முன்னர்தான், கூட்டத்தில் ரகளை செய்வது - ஊளையிடுவது - பத்துப் பேர் சேர்ந்து அமளி செய்வது என்றிருந்தது!

அறிஞர் அண்ணா அவர்கள் அரசியலுக்கு வந்த பிறகுதான், கருத்துக்குக் கருத்து - பேச்சுக்குப் பேச்சு பதில் சொல்லும் பண்பாட்டைக் கொண்டு வந்தார்! தனது கட்சிக்கு மட்டுமல்லாமல், பிற கட்சிகளுக்கும் அந்தப் பண்பாட்டைப் போதித்தார்.

ஆனால் அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டவர்களைச் சந்திக்க முடியாமல் கூட்டங்களைக் கலைக்கின்ற வன்முறையில் ஈடுபடுகிறார்கள்!

இதே முறையில் தி. மு. கழகத்தினரும் ஈடுபட்டால், அவர்கள் அப்படிப்பட்ட நிலையைச் சமாளித்துத் தீரவேண்டி வரும்!

ஆகவே, 'கருத்துக்குக் கருத்து' எனும் பண்பை அனைவரும் கட்டிக்காக்க வேண்டும்; அப்படிக் கட்டிக் காக்காமல் விட்டு விட்டால், தமிழகம் கட்டிக் காத்து வந்த பண்பாடு - அண்ணா உருவாக்கிய பண்பாடு மறந்துவிடும்!"

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பம்பாயிலிருந்து வெளிவருகின்ற ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் சார்பில் என்னைப் பேட்டி கண்டபோது, 'தி[illegible]ராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எம். [illegible]ஜி. ஆர். பிரிந்துவிட்டதால் கழகம் பலகீனப்[illegible]பட்டு விடாதா' என்று கேட்டார்கள்; அவர்[illegible]களிடம் அரசியல் நாகரிகத்தோடு - எம். ஜி. [illegible]ஆர். கட்சியை அதிகமாகக் குறை கூறக்கூட[illegible] என்பதற்காக நான் பதில் சொன்னேன் -

'கடலில் இருக்கின்ற தண்ணீர் கதிரவன் வெப்பம்பட்டு ஆவியாக மாறிப் போய்விடுவதால், கடல் பலகீனப்பட்டு விடுவதில்லை; அதைப்போல், கழகத்தின் நிலை கடலைப் போன்றது; கடலைப் போல இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம்; கதிரவன் வெப்பத்தால நீராவியாகக் கொஞ்சம் தண்ணீர் போவதைப் போல, எம். ஜி. ஆர். கட்சிக்கு சிலர் போயிருக்கலாம்" என்று!

அதையும் நான் இலக்கிய நயத்தோடுதான் சொன்னேன்; 'நீராவியாகப் போனது மறுபடியும் பூமிக்கு மழையாகத்தான் வரும்; வந்த பிறகு அது மறுபடியும் கடலுக்குத்தான் வரும்; சேராதது வழியிலேயே போய்விடும்' - இதைத்தான மனதிலே வைத்துக் கொண்டு அந்தக் கேள்விக்கு அந்த உணர்வின் மூலம் பதில் சொன்னேன்; ஆகவே, அந்த நிலை பற்றி சோர்வு அடையத் தேவையில்லை!'

சட்டமன்றக் கூட்டம்— ஆளுநர் உத்தரவு பற்றி

உயர் நீதிமன்றத்தில் பிரச்சினை

சென்னை, நவ. 30—

தமிழ்நாடு சட்டமன்றம் டிசம்பர் 2-ந் தேதி கூட்ட வேண்டுமென்று ஆளுநர் கே.கே. ஷா உத்தரவு பிறப்பித்திருப்பதை, சென்னை உயர் நீதிமன்றத்தில் சபாநாயகர் கே.ஏ. மதியழகன் மனுவை விசாரிக்கும் புல்பெஞ்சின் கவனத்திற்கு - கே. ஏ. மதியழகன் சார்பில் வாதாடும் வழக்குரைஞர் வி. பி. இராமன் கொண்டுவந்தார்; நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், எதுவும் செய்யப்பட மாட்டாது என்ற நம்பிக்கையில்தான், 'தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று நான் வற்புறுத்தவில்லை' என்று கூறினார்.

தலைமை நீதிபதி:— "சட்டமன்றக் கூட்டத் தொடரை முடித்து வைத்து ஆளுநர் பிறப்பித்த உத்திரவு சரியல்ல என்று (இந்த வழக்கு விசாரணையின்) முடிவில் நீதிமன்றம் முடிவு செய்தால், எல்லா நடவடிக்கைகளுமே செல்லுபடியாகாமல் போய்விடும்; சட்டமன்றக் கூட்டத் தொடரை முடித்துவைத்ததையே எல்லாம் பொறுத்திருக்கிறது; சட்டமன்றக் கூட்டம் ஒருநாள் நடந்தாலும் - மூன்று நாட்கள் நடந்தாலும் எல்லாம் செல்லுபடியற்றதாகி விடும்."

வி. பி. ராமன்:— "தடையுத்தரவு வாங்க வேண்டுமென்று என் கட்சிக்காரர் என்னிடம் சொன்னார்; என்னுடைய மனப்பான்மை தவறாக அர்த்தம்படுத்திக் கொள்ளப்பட்டு விட்டது போலிருக்கிறது; சட்டமன்றக் கூட்டத்தொடரை கவர்னர் முடித்தது செல்லுமா என்பதைப் பற்றி நீங்கள் விசாரணை நடத்திக்கொண்டிருக்கும்போது......

தலைமை நீதிபதி:— "கூட்டத் தொடரை முடித்து வைத்தது செல்லும் என்று நீதிமன்றம் கருதினால், மீண்டும் இப்போது சட்டமன்றத்தைக் கூட்டியிருப்பதும் செல்லும்; இல்லாவிடில் பலன் இருக்கவே இருக்கிறது; அவ்வளவுதான்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.